<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.465/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ரேணுகா | Prosecution | |
| Father Name | க/பெ.குணசேகரன் | Defence | DW1. Cross |
| Village | தென்பாதி, சீர்காழி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 44/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

<u>**12.11.2025.**</u>

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. புகார்தாரர் ஆஜர்**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பிஸ்கெட் ஏஜென்சியில் 15 வருடமாக மேனஜேரகா பணிபுரிகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Com. படித்துள்ளேன். மனுதாரர் எனக்கு 2018 முதல் பழக்கம் என்றால் சரிதான். நான் ஏற்கனவே வசித்தது விளந்திட சமு்த்திரம் வில்வா நகர் என்றால் சரிதான். தற்போது தென்பாதி யில் 4 வருடங்களாக குடியிருக்கிறேன். மனு தாரர் இருப்பது அத்தியூர் கிராமம் என்றால் சரிதான். மனுதாரரின் கணவர் அயல்நாட்டில் வேலை செய்தார் என்றால் சரிதான். மனு தாரரும் வைத்தீஸ்வரன் பால் சொசைட்டியில் கணக்கராக இருக்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. நான் 2018 முதல் மனுதாரருக்கு பழக்கம் என்றால் சும்மா பழக்கம், கொடுக்கல் வாங்கல் இல்லை.

எனக்கு விளந்திடசமுத்திரத்தில் நஞ்சை மனை சர்வே நம்பர் 211 /1 ல் மனை சொந்தமாக உள்ளது என்றால் சரிதான். அந்த மனையை எனது தாயார் எனக்கு செட்டில் மெண்டாக எழுதிக்கொடுத்துள்ளார், அந்த செட்டில் மெண்ட ஆவணம் Ex.P.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த

மனையை நான் 06.11.2019 ல் மனுதாரருக்கு அடமாணமாக வைத்து அடமாண கடன் பத்திரம் ஒன்று எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் Ex.P.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தல் ஆவண எண் 3263 /2019 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முதல் சாட்சியாக என் சகோதரியின் கணவர் திருமுருகன் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணப்படி நான் மனுதாரரிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். அதற்கு 100க்கு 2 ரூபாய் வீதம் வட்டி தருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வட்டியை மாதமாதம் கொடுக்வேண்டும் என்பது நிபந்தனை என்றால் சரிதான். அப்படி மாதமாதம் வட்டியை கொடுக்கவில்லை என்றால் கூட்டுவட்டியாக கணக்கிடப்படும் என்றால் சரிதான்.

நான் வழக்கிற்கு முன்பாக 05.11.2020 ந்தேதி வழக்கறிஞர் R.கார்த்திக்ராஜன் வைத்து ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த அறிவிப்பில் 5 லட்சரூபாயை 21.08.2020 ல் அசல் வட்டி கூடுதல் தொாகை 5 லட்சத்து 95 ஆயிரத்தை மனுதாரரிடம் கொடுத்து கணக்கு தீர்த்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனுக்கு நான் எழுதி கொடுத்த அடமாண பத்திரத்தை ரத்து செய்து வரவு ரசீது பதிவு செய்து கொடுக்க 1 மாத கால அவகாசம் வேண்டீ சாட்சிகள் முன்னிலையில் 21.08.2020 ல் ஒரு அடமாண ரத்து பத்திரம் மனுதாரர் எழுதி கொடுத்ததாக இந்த அறிவிப்பில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை.

நான் கொடுத்த அறிவிப்புக்கு மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த பதில் அறிவிப்பின் அலுவலக நகல் என்றால்

சரிதான். ( **அந்த ஆவணம் வாசாஆ.11 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. ) இந்த பதில் அறிவிப்பில் அவர் கொடுத்த அறிவிப்பை மறுத்து பதில் கூறியுள்ளார் என்றால் தவறு. நான் பணம்கொடுத்து கணக்கு தீர்க்கவில்லை என்று அதில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அடமாண பத்திரத்தில் மேற்படி கடனை 1 வருடத்திற்குள் கொடுத்து அசல் வட்டி தீர்க்க வேண்டும் என்று நிபந்தனை உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தினை அடமாணம் எதற்கு வைத்தேன் என்றால் வீடு கட்டுவதற்காக வாங்கவில்லை. குடும்ப செலவிற்காக அடமாணத்தொகை வாங்கினேன்.

நான் மேற்படி தொகையை அசல் வட்டியுடன் கணக்கு தீர்த்துவிட்டேன் என்று நான் இன்று வரை எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தொகையினை கொடுக்காததால் 21.08.2020 ல் முக்கிய நபர்களுடன் என்னிடம் தொகை குறித்து கேட்கும் போது நான் வட்டியை கணக்கிட்டு 5 லட்சத்து 95 ஆயிரத்திற்கு 21.10.2020 தேதியிட்டு என் கணக்குள்ள ICICI வங்கி காசோலை எண்.000294 மனுதாரர் பெயருக்கு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. E.x.P.1 என்னுடைய காசோலை என்றால் சரிதான். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். நான் காசோலையை கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யாமல் கொடுத்தேன். நான் காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மனுதாரர் மேற்படி காசோலையை 24.11.2020 அன்று இந்தியன் வங்கி சீர்காழி கிளையில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அது E.xP.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் காசோலை கொடுக்கும் போது செட்டில் மெண்ட் ஆவணம் Ex.P.8 திரும்ப மனுதாரரிடம் இருந்து வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த அடமாண ஆவணததை அக்கவுன்ட்டில் பணம் குறைவாக உள்ளது

நான் வெளியில் வைத்து பணம் வாங்கி காசோலை தேதிக்குள் வங்கியில் செலுத்திவிடுகிறேன் என்று கூறியதன் அடிப்படையில் தான் அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் திரும்ப மனுதாரரிடம் இருந்து வாங்கினேன் என்றால் சரியல்ல.

வங்கியில் பணம் இல்லை என்று திரும்பி வந்ததால் 21.12.2020 ல் இந்த மனுதாரர் Ex.P.5 அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை 24.12.2020 ல் நான் வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. அறிவிப்பை வாங்கிய பிறகு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அறிவிப்பை அவர் பதில் அறிவிப்பை கொடுக்க மறந்து விட்டார். வழக்கறிஞர் மறந்து விட்டார் என்பதை எப்போது தெரந்து கொண்டேன் என்றால் வழக்கிற்கு பின்னால் தெரிந்து கொண்டேன். அடமாணப்பத்திரப்படி அசல் வட்டியை நான் கொடுக்க வேண்டும் என்று மனுதாரர் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்த்தில் அசல் வழக்கு எண். 392/2021 வழக்கை அசல் வட்டி தொகைக்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

அந்த வழக்கு ஆளுகை வரம்பிற்காக சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் ஆகி OS.No.6/2023 ஆக நடைபெற்று வருகிறது. அந்த பிராது நகல் Ex.R.1 ஆக ஏற்கனவே என் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் போட்ட எதிர் வழக்குரையில் மனுதாரரிடமிருந்து புரோநோட் மூலமாக 1 லட்சம் ரூபாயும் சில்லரை கடனாக 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் 2 லட்சத்து 20 ரூபாய் தான் மனுதாரரிடம் வாங்கியுள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்ய்ப்பட்ட எதிர் வழக்குரையின் Served Copy தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் வாசாஆ.12 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. அந்த வழக்கில் விசாரணை ஆரமித்து நான் DW1 ஆக நிரூபண வாக்குமூலம் கொடுத்துள்ளேனா என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அந்த நிரூபண வாக்குமூலத்தின் Served Copy என்றால் சரிதான். **அந்த ஆவணம்**

**வாசாஆ.13 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரரிடம் **1 லட்சம் ரூபாயும் சில்லரை கடனாக 2 லட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பது ஆக மொத்தம் 3 லட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பது** தான் வாங்கியுள்ளேன் மீதம் **1 லட்சத்தது தொன்னுத்தெட்டு ஆயிரத்து முன்னூற்று ஐம்பது** வாங்கவில்லை என்று கூறியிருக்கிறேனா என்றால் அது தான் உண்மை. அதாவது **3 லட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபாயை** அடமான தேதியிலிருந்து நாளது தேதி உள்ள வட்டியை நான் கொடுக்க சம்மதிக்கிறேன் என்றால் சரிதான். அதனால் நான் அறிவிப்பு பிரகாரம் கணக்கை தீர்த்து விட்டதாக ஒரு பொய்யும், Statement மூலமாக நான் முழுத்தொகையும் வாங்கவில்லை என்ற ஒரு பொய்யும், முன்னுக்கு பின் முரனாக மனுதாருக்கு கொடுக்க வேண்டிய தொகையை ஏமாற்ற வேண்டும் என்தற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இது போல 5 லட்சம் வாங்க வில்லை **3 லட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பது** தான் வாங்கியுள்ளேன் என்ற அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**